भाकृअनुप ICAR

# இயற்கைப் பண்ணையம் - ஜீவாமிர்தம், கனஜீவாமிர்தம்

IN SERVICE OF RURAL MASS TNBRD - CHENNAI

இயற்கை சுற்றுச்சூழல் அமைப்புகளை அப்படியே பராமரிப்பதே இயற்கை விவசாயமாகும். இயற்கை விவசாயத்தில் ரசாயன உரங்கள் மண்ணில் சேர்க்கப்படுவதில்லை. இயற்கை பண்ணையம் மூலம் நுண்ணுயிரிகள் மற்றும் மண்புழுக்களின் எண்ணிக்கையினை மண்ணின் மேற்பரப்பிலேயே, அதிகப்படுத்த ஜீவாமிர்தம், கனஜீவாமிர்தம் போன்ற உயிர்ஊக்கி கலவைகள் அவசியம் சேர்க்கப்படவேண்டும். இதனால் நுண்ணுயிரிகள் படிப்படியாக மண்ணிலுள்ள கரிம பொருட்களை சிதைத்து, ஊட்டச் சத்தினை மண்ணில் அதிகப்படுத்துகிறது.

## ஜீவாமிர்தம்

**தேவையான பொருட்கள்:**

- நாட்டுமாட்டின் சாணம் - 10 கிலோ
- நாட்டுமாட்டின் கோமியம் - 10 லிட்டர்
- வெல்லம் - 2 கிலோ (அ) கரும்புச்சாறு - 4 லிட்டர்
- தானிய மாவு (தட்டைப்பயிறு (அ) துவரை (அ) கொள்ளு (அ) கொண்டைக்கடலை (அ) உளுந்து) - 2 கிலோ
- மண் - கையளவு
- தண்ணீர் - 180 லிட்டர் (குளோரின் கலக்காதது)

**தயாரிக்கும் முறை:**

200 லிட்டர் தண்ணீரில் சாணம், கோமியம், வெல்லம் அல்லது கரும்புச்சாறு மற்றும் தானியமாவு ஆகியவற்றுடன் கையளவு மண் சேர்த்து ஒரு தொட்டியில் இட்டு கலக்க வேண்டும். தினமும் 3 முறை 3 நாட்களுக்கு தவறாமல் கலக்கி விடவேண்டும். ஒரு கிராம் மண்ணில் 5 லட்சம் கோடிக்கும் அதிகமான நுண்ணுயிரிகள் இருக்கின்றன. ஒவ்வொரு 20 நிமிடத்திற்கும் இந்த நுண்ணுயிரிகள் இரட்டிப்பு அடைகின்றன. இவ்வாறு கலக்கப்பட்ட இந்த நுண்ணுயிர் கலவை தான் ஜீவாமிர்தம் ஆகும்.

**பயன்பாடு:**

- தெளிப்புக்காக எடுக்கும்போது, கரைசலின் மேற்புறத்தில் இருக்கும் தெளிவை மட்டும் எடுத்து 10 லிட்டர் தண்ணீருக்கு 500 மில்லி முதல் 1 லிட்டர் வரை பயிரின் வளர்ச்சிக்கேற்ப 15 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்கலாம்.
- ஒரு ஏக்கருக்கு 400 லிட்டர் முதல் 600 லிட்டர் வரை ஜீவாமிர்தத்தினை பாசனநீருடன், கலந்து அளிக்கலாம்.
- விதைநேர்த்தி செய்யும்போது, விதைகளை இந்த கரைசலில் 2 மணி நேரம் ஊறவிடவேண்டும். நாற்றுகளாக இருந்தால் அதன் வேர்களை நன்றாக நனையவிட்டு பிறகு நடவு செய்யலாம்.

## கன ஜீவாமிர்தம்

பசுமாட்டுசாணம் 100 கிலோ, 2 கிலோ வெல்லம், 2 கிலோ பயறு மாவு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து கொள்ளவேண்டும். இக்கலவையானது உப்புமா பதம் வரும்வரை, நாட்டுமாட்டு கோமியத்தை சேர்க்கவேண்டும். பின்பு உருட்டி நிழலில் காயவைத்து தேவைப்படும்போது உதிர்த்துப் பயன்படுத்தலாம்.

**பயன்பாடு**

- குறுகிய கால பயிர்களை நடும்பொழுது அடியுரமாக 500 கிலோ கனஜீவாமிர்தம் இடவேண்டும்.
- அதன்பின் 100-200 கிலோ பயிரின் வளர்ச்சிக்கேற்ப கனஜீவாமிர்தத்தினை இடவேண்டும்.

**நன்மைகள்**

- நுண்ணுயிர்களின் வளர்ச்சி பலமடங்கு அதிகரிக்கிறது.
- மண்புழுக்களை அதிகரிக்க செய்கின்றது.
- மண்ணை சத்துநிறைந்ததாக மாற்றுகின்றது.
- இக்கலவைகளை பயன்படுத்துவதால் நோய்கள், பூச்சித்தாக்குதல் குறைகின்றது.
- வேர் அழுகல், வேர்க்கரையான், வேர்ப்புழுக்கள் போன்றவற்றை தடுக்கின்றது.